# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




கடந்த மாதஇதழில், திருவரங்கத்தமுதனார் பற்றிய குறிப்பு அறிந்தோம். சித்திரை மாத இதழ் தொடக்கமாக, அவர் இயற்றிய இராமானுச நூற்றந்தாதியை அனுபவிப்போம்.

## அவதாரிகை

கேள்வனுக்குச் சேதநரைத் திருத்தி ஆளாக்க ஆச்சார்யர்கள் திருமந்திரத்தை உபதேசித்தருள்வர். அந்த திருமந்திரம் சாஸ்திரங்கள் அனைத்தையும் தன்னுட் கொண்டது. சாஸ்திரங்களை முற்றும் கற்றுத் தத்துவ ஞானம் விளங்குதல் சால அரிது. ஆச்சாரியர்கள் தரும் திருமந்திரத்தால் ஏற்படும் தத்துவ ஞானமோ, பாடுபடாது எளிதில் பெறலாம்படி அமைந்துள்ளது. அத்தகைய திருமந்திரம் மூன்று நிலைகளைக் கொண்டது.
இம்மூன்று நிலைகளையும் முறையே

**அநந்யார்ய சேஷத்வம்–**

இது இரண்டு பதங்களைக் கொண்டது. ஜீவாத்மா எம்பெருமான் ஒருவனுக்கே உரித்தானது என்பதே அநந்யார்ய என்ற பதத்தின் பொருள்.
ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு ஒருவருக்கும் ஜீவாத்மா அடிமையில்லை என்பதே சேஷத்வம்.

**அநந்ய சரணத்வம்**

பிரபத்தியிலே ஜீவாத்மா அனுபவிப்பதே இது. ஜீவாத்மா தான் அநந்ய சரண்யன் என்று உணர்ந்து கொள்கிறான். இந்த ஜீவனால் கர்ம,ஞான, பக்தி யோகங்களை கடைபிடிக்க இயலாது. ஆகையால் ஆதரவற்று இருக்கிறான். இந்த ஆதரவற்ற நிலையிலே எம்பெருமானின் கிருபையைப் பெற பிரபத்தியைத் தவிர வேறு உபாயமில்லை. வேறு உபாயம் இல்லை என்பதே இப்பதத்தின் பொருள்.

**அநந்ய போக்யத்வம்**

பரமைகாந்திகளின் நிலையாகும் இது. ஜீவாத்மாவின் ஒரே சந்தோஷம் அல்லது போக்யம் எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யமேயாகும்.

இம் மூன்று நிலைகளையும் சேர்த்து ஆகாரத்ரயம் என்பது உண்டு.
எம்பெருமான் திறத்திற் கொண்ட ஆகாரத்ரயம் ப்ரதமபர்வ நிஷ்டை என்றும், ஆச்சார்யன் திறத்திற்

கொண்ட ஆகாரத்ரயம் சரமபரவ நிஷ்டை என்றும் கூறப்படும்.

பரம ரஹஸ்யமான இந்நிலை (சரமபர்வ நிஷ்டை) எம்பெருமானார் தமது இயல்பான கருணையினால் கூரத்தாழ்வான் திருவடிகளில் ஆச்ரயிக்கும்படி செய்து, அவ்வாழ்வான் மூலமாகத் தமக்கு உபதேசித்தருளக் கேட்டு, அந்நிலையை உள்ளபடி கண்டுக் கொண்ட திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் திருவடிகளையே எப்போதும் சேவித்துக் கொண்டு அவருடைய கல்யாண குணங்களையேத் தமது பக்திக் கேற்ப அநுபவித்து, அவ்வநுபவம் உள்ளடங்காது வெளிப்பட்ட சொற்கள் இவ்விராமநுச நூற்றந்தாதி என்னும் திவ்யபிரபந்தமாய் அமைந்தன.

எம்பெருமானார் திருவருளால் தமக்குக் கிடைத்த இந்த பரம ரஹஸ்யத்தை எல்லோரும் எளிதில் அறிந்து உய்வு பெற வேணுமென்னும் க்ருபையால் வெளிப்படுத்துகிறார் அமுதனார் இத்திவ்ய பிரபந்தத்தில்.

எம்பெருமானார் அடியார்கட்கு, நிச்சலும் ஸாவித்ரி போல இது அநுஸந்தித்தற்கு உரியதாக வேணும் என்னும் கருத்துடன், 'இராமானுசன்' என்னும் திருநாமத்தை அமைத்து இத்திவ்ய ப்ரபந்தம் நூற்றெட்டுப் பாட்டாக அருளிச் செய்யப் பட்டுள்ளது. ப்ரபந்ந ஸாவித்ரி என்று நம்மாச்சார்யர்கள் இதனை அருளிச் செய்வர்.

**பாசுரம்-1**



பூமன்னு மாது பொருந்திய மார்பன்* புகழ்மலிந்த
பாமன்னு மாறன்*அடிபணிந்துய்ந்தவன்*பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமனுசன்* சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ*நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே!

**பாசுரக் கருத்து**

எம்பெருமானார் திருவடிகளிலே பொருந்தி நல்வாழ்வு பெறும்படி, அவர் திருநாமங்களைச் சொல்லுவோம் வா என்று அமுதனார் தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்கிறார்.

**பதவுரை**

பூ மன்னு மாது - தாமரைப்பூவிலே தங்கி குடியிருக்கும் பெரிய பிராட்டியார்.

மாது பொருந்திய மார்பன் -
பெண்டிர்க்குப் புக்ககம் புகுந்த பின்னர்ப் பிறந்தகம் பொருந்தாது அல்லவா? பிராட்டிக்கும் புக்கமாகிய எம்பெருமானது திருமார்பகம் புகுந்த பின்னர், பிறந்தகமாகிய பூ பொருந்தாதது ஆயிற்று என்பது தோன்ற "பூ மன்னு பொருந்திய மார்பன்" என்பதாயிற்று.
புகழ் மலிந்த பா- திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்கள்

பாமன்னு மாறன் - கவிதை பாடுவதில் மனம் பொருந்தியீடுப்பட்ட மாறன்(நம்மாழ்வார்)
மாறன் அடிபணிந்துய்ந்தவன் - உண்ணும் சோறு, பருகும் நீர் எல்லாம் கண்ணன் என்பதையே தாரமாக கொண்ட மாறனையே, தாரகமான உணவாக கொண்டுய்ந்தவர் எம்பெருமானார். இதனால் உய்யும் வழி ஆழ்வார் திருவடி சம்பந்தமே என்பதை உலகிற்கு உணர்த்தியவர் எம்பெருமானார்.

**பாசுர அர்த்தம்**

தாமரைப்பூவினை தனது இருப்பிடமாக கொண்ட பெரிய பிராட்டி,(அப்பூவை விட்டு வந்து) பொருந்தி வாழும்படியான அழகு படைத்த மார்பை உடையவனான பெருமானுடைய,திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ்ப்பாசுரங்களிலே, ஊற்றமுடையவரான நம்மாழ்வாருடைய திருவடிகளை ஆஸ்ரயித்து உஜ்ஜீவித்தவரும், பற்பல கலைகளை (சாஸ்த்ரங்களை)ஓதுவோர் நிலை நிற்கும்படி அவதாரம் செய்த எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை, நாம் பொருந்தி வாழும்படி, மனமே!அந்த எம்பெருமானாருடைய திருநாமங்களை சொல்லுவோம்.

**பாசுரம்-2**



கள்ளார் பொழில் தென்னரங்கன்* கமலப்பதங்கள்
நெஞ்சில் கொள்ளா மனிசரை நீங்கி* குறையற் பிரானடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன்* மிக்க சீலமல்லால்
உள்ளாதென் நெஞ்சு* ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே.

**பாசுரக் கருத்து**

"நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே" என்றதும் என்னெஞ்சு எம்பெருமானாரது சீலகுணத்தில் ஈடுபட்டு வேறொன்றையும் நினைக்கிலாததாயிற்று. இச்சீரிய நிலை எய்துதற்கு காரணமெதுவும் தெரியவில்லை. இப்பாசுரத்தில் திருமங்கையாழ்வார் திருவடி சம்பந்தமும், கல்லாத,அல்லாதவர்கள் சேர்க்கை இல்லாமையும் பேசப்படுகின்றன.

**பதவுரை**

தேன் நிறைந்த சோலைகளையுடைய திருவரங்கத்திலே பள்ளி கொள்ளும் பெருமானுடைய தாமரை போன்ற திருவடிகளைத், தம் உள்ளத்தில் வைத்துக் கொள்ளாத மனிசரை விட்டு விலகி, திருமங்கைமன்னனுடைய திருவடிகளிலே என்றும் விட்டு நீங்காத பக்தியையுடைவரான, எம்பெருமானாருடைய சீல குணத்தைத் தவிர, எனது மனம் வேறொன்றையும் நினையாது. இவ்வாறு எனக்குக் கிடைத்த பேற்றிற்கு ஒரு காரணத்தையும் நான் அறியேன்.

## பாசுரம்-3



பேரியல் நெஞ்சே! அடிபணிந்தேன் உன்னைப்*
பேய்ப்பிறவிப் பூரியரோடுள்ள சுற்றம் புலத்தி* பொருவரும்சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கன்பு செய்யும்*
சீரிய பேறுடையார் அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே.

**பாசுரக் கருத்து**

“அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய்” என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கூறியது போல், அமுதானாருடைய நெஞ்சானது, விலக்க வேண்டியவர்களை விலக்கி, இராமனுசரடியாரான கூரத்தாழ்வான் திருவடிகளில், தன்னைக் கொண்டுச் சேர்த்ததற்காக, அதனை தொழுகிறார்.

**பதவுரை**

பெருந்தன்மையுள்ள நெஞ்சமே! தீய பிறப்புடைய பொல்லாதவர்களோடு, உண்டான உறவை நீக்கி, ஒப்பற்ற சீர்குணங்களை உடையவரும், கலைகளை உணர்ந்தவரும், நேர்மை உடையவருமான

எம்பெருமானார் திறத்தே பக்தி பண்ணுவதையே, பரம புருஷார்த்தமாக உடையவர்களான கூரத்தாழ்வான் போல்வாருடைய திருவடிகளின் கீழே,பரம நீசனாயிருந்த என்னைகொண்டு சேர்த்த இவ்வரிய பேருதவிக்காகவே உன்னை அடி பணிந்தேன் என்று அருளுகிறார்.